DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 338/2020** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : திரு.மனோகரன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 06.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 06 july 2026**.**

A3 died. A1,A2,A4 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

முதல்விசாரணை:

நான் தற்போது தென்காசி மாவட்ட வீரகேரளம்புதூர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு குருவிகுளம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 21.09.2013–ம் தேதி 15.00 மணிக்கு செல்வராணி உதவி ஆய்வாளர் நிலையபொறுப்பில் இருந்தபோது, செவல்குளம் கிராமத்தை சேர்ந்த பழனிசாமி என்பவர் புகார் மனுவை பெற்று அதன்தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.17/2013 இ.த.ச.பிரிவுகள் 465, 468, 421, 420 –ன்படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்னர்

மேல்விசாரணைக்காக என் பார்வைக்கு வழக்கு கோப்புகளை சமர்ப்பித்தார். அதன் அடிப்படையில் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 21.09.2013–ம் தேதி 16.00 மணிக்கு சாட்சிகள், ராஜ்தேவர் மற்றும் சண்முகவேல் ஆகியோர்களை முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் பழனிசாமி, மகாலிங்கம், ராஜ்தேவர், சண்முகவேல், மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த உதவி ஆய்வார் செல்வராணி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் பணிமாறுதல் காரணமாக மேற்படி வழக்கை புலன்விசாரணை செய்ய முடியாத காரணத்தினால் மேற்படி வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் கமராஜ் என்பவரின் மேற்பார்வைக்கு வழக்கு கோப்பினை வைத்தேன். வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் கண்ணன் என்னை விசாரனண செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

அ.சா.1 கிரையம் பெற்ற இடத்தை எதிரிகள் அதே இடத்தை வேறு ஆவணம் பதிவு செய்து விட்டார்கள் என்பது தான் வழக்கு என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் ஆவணங்கள் ஏதும் புகார் மனுவுடன் கொடுத்ததாக துலங்காது. நான் விசாரணைக்கு எடுத்த பின்பு அ.சா.1–யிடம் ஆவணங்கள் கேட்டும் அவர் என்னிடம் ஆவணங்கள் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த சாட்சிகளின் அடிப்படையில் எவ்வாறு ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது, உண்மையிலேயே குற்றம் நடந்துள்ளதா,என்பது பற்றி எதுவும் துலங்கவில்லை என்றால் சரிதான். நான் வருவாய்துறை அதிகாரியிடமும், சார்பதிவாளரிடமும், ஆவணங்களை கேட்டு மனு கொடுத்திருந்தேனா

என்றால் மனு கொடுத்திருந்தேன். நான் மேற்படி வருவாய்துறை அதிகாரியிடமும், சார்பதிவாளரிடமும், எந்ததேதியில் மனு கொடுத்தேன் என்ற விபரம் வழக்குகோப்பில் துலங்குமா என்றால் 21.09.2013 அன்று மனு கொடுத்தேன். என்னை ஆய்வாளர் விசாரிக்கும்போது, 21.09.2013 அன்று நான் மனு கொடுத்தாக எதுவும் கூறிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். ஆனால் கிடைக்கப்படவில்லை என்று கூறினேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்யும்போது மேற்படி புகார் மனுவில் பெற்றுள்ள சங்கதிகள் உரிமையியல் சம்மந்தப்பட்டது என விபரம் தெரிந்துகொண்டேன் என்ற விபரம் கூறியுள்ளேன். நான் கூறிய நாள் நேரத்தில் புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.